

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர், பைபாஸ் சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தாட்கோ தலைவர் இளையராஜா, தாட்கோ முன்னாள் தலைவர் உமதிவாணன், திருவாரூர் நகர மன்ற தலைவர் புவனப் பிரியா செந்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி. கல்யாணம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர், பைபாஸ் சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தாட்கோ தலைவர் இளையராஜா, தாட்கோ முன்னாள் தலைவர் உ. மதிவாணன், திருவாரூர் நகர மன்ற தலைவர் திருமதி புவனப் பிரியா செந்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி. கல்யாணம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# கலைஞர் கோட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கலைஞர் கோட்டத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்வின்போது நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ். விஜயன். சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் இளையராஜா, தாட்கோ முன்னாள் தலைவர் உ.மதிவாணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டம், காட்டூர், கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அருங்காட்சியகம், முத்துவேலர் நூலகம், கலைஞரின் கலைபாதை ஒலியும் ஒளியும், கலைஞரின் அரசியல் பாதை ஒலியும் ஒளியும் போன்றவற்றை பார்வையிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டம், காட்டூர், கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அருங்காட்சியகம், முத்துவேலர் நூலகம், கலைஞரின் கலைபாதை ஒலியும் ஒளியும், கலைஞரின் அரசியல் பாதை ஒலியும் ஒளியும் போன்றவற்றை பார்வையிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டம், காட்டூர், கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அருங்காட்சியகம், முத்துவேலர் நூலகம், கலைஞரின் கலைபாதை ஒலியும் ஒளியும், கலைஞரின் அரசியல் பாதை ஒலியும் ஒளியும் போன்றவற்றை பார்வையிட்டார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில்

## அமைச்சர் அர.சக்கரபாணி இல்லத் திருமண வரவேற்பு விழா!

### சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 11-

ஒட்டன் சத்திரம், கள்ளி மந்தையம் கிராமம் காளியப்ப கவுண்டன்பட்டி நினைவில் வாழும் ஆர்.ரங்கசாமி - ஆறுமுகத்தம்மாள் ஆகியோரது மகன் வழிப்பேத்தியும், திண்டுக்கல் கன்னிவாடி நினைவில் வாழும் கே.நல்லையா -சரோஜா ஆகியோரது மகள் வழிப் பேத்தியும், திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி - எஸ்.ராஜலட்சுமி ஆகியோரது புதல்வியுமான



எஸ்.தீப்தாவுக்கும், காங்கயம், காடையூர் நினைவில் வாழும் பி.துரைச்சாமி - தெய்வாத்தாள் ஆகியோரது மகன் வழி பேரனும், காங்கயம் அகிலாண்டபுரம் நினைவில் வாழும் சின்னசாமி - வள்ளியாத்தாள் ஆகியோரது மகள் வழி பேரனும், டி.ஈஸ்வர மூர்த்தி - இ.விஜயலதா ஆகியோரது புதல்வருமான இ.சிவபிரதீப்க்கும் திருமண வரவேற்பு விழா இன்று (11.7.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை திருவான்மியூர் இராமச்சந்திரா கன்வென்சன் ஹாலில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பு விழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

இம்மண விழா வரவேற்பில் தலைமைக் கழக நிர்வாகிகள், அமைச்சர் ஐ. பெரியசாமி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற இந்நாள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள், கழக முன்னணியினர், தோழமைக் கட்சியினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

## திருவாரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

திருவாரூர், ஜூலை 11-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (09.07.2025) திருவாரூர் மாவட்டத்தில், கும்பகோணம்-திருவாரூர் சாலையில், பவித்திரமாணிக்கத்தில் தொடங்கி தூர்காலயா ரோடு வழியாக தெப்பக்குளம் தெற்குவீதி, பனகல் சாலை, பழைய பேருந்து நிலையம் வழியாக 5 கி.மீ., தூரம் நடைபயணம் மேற்கொண்டு, பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்து பின்பு நாகப்பட்டினம் தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் திருவாரூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (09.07.2025) திருவாரூர் மாவட்டத்தில், கும்பகோணம்-திருவாரூர் சாலையில், பவித்திரமாணிக்கத்தில் தொடங்கி தூர்காலயா ரோடு வழியாக தெப்பக்குளம் தெற்குவீதி, பனகல் சாலை, பழைய பேருந்து நிலையம் வழியாக 5 கி.மீ., தூரம் நடைபயணம் மேற்கொண்டு, பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றுக்கொண்டார்.

அப்பொழுது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கண்ட பொதுமக்கள் இன்முகத்துடன் வரவேற்றார்கள்.

பெண்கள், பொதுமக்கள் அதிகளவில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பார்வையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம்-தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில், திருவாரூர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையினை திறந்து வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.